tnkalvi.online

No. of Printed Pages : **7**

6201

பதிவு எண்

தமிழ்

கால அளவு : **2.00** மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : **100**

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - I

1. **சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டு எண்ணுடன் விடையையும் சேர்த்து எழுதுக. **3x1=3**

(i) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் _____.

(அ) வைப்பு (ஆ) கடல்

(இ) பரவை (ஈ) ஆழி

(ii) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் _____.

(அ) பாரதிதாசன் (ஆ) தந்தை பெரியார்

(இ) வ.உ. சிதம்பரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

(iii) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் _____.

(அ) திருச்சி (ஆ) சென்னை

(இ) மதுரை (ஈ) கோவை

2. கோடிட்ட இடங்களை நிரப்புக. **3x1=3**

(i) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் _____ என அழைக்கப்பட்டன.

(ii) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது _____ இன்பம் ஆகும்.

(iii) பின்னலாடை நகரமாக _____ விளங்குகிறது.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

3. பின்வரும் வினாக்களைப் படித்து **இரு** வினாக்களுக்கு ஒரு விடை தருக. **2x1=2**

(அ) வீரர்கள் எவற்றை அணிந்து சென்றனர் ?

வீரர்கள் எவ்வாறு சென்றனர் ?

(ஆ) அரசரைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல் எது ?

பசுவைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல் எது ?

4. மொழி பெயர்க்க : **2x1=2**

(அ) Vowel _____

(ஆ) Talent _____

காது கேளாத மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா :-

உரிய இடத்தில் தமிழெண்களை எழுதுக.

(அ) 11 _____ (ஆ) 25 _____ (இ) 18 _____ (ஈ) 64 _____

பகுதி - II

பிரிவு - 1

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. **5x2=10**

5. உலகம் எவற்றால் ஆனது ?

6. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை ?

7. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர் ?

8. எது பெருமையைத் தரும் ?

9. மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை ?

10. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது ?

11. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 2

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்தனுக்கு** விடையளிக்கவும். **5x2=10**

12. ஓவிய எழுத்து என்றால் என்ன ?

13. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது ?

14. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை ?

15. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் – ஒப்பிடுக.

16. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது ? ஏன் ?

17. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை ?

18. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார் ?

பிரிவு - 3

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்தனுக்கு** விடையளிக்கவும். **5x2=10**

19. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன ?

20. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை ?

21. 'அழகிய மரம்' – எவ்வகை எச்சம் ?

22. எழுவாய் வேற்றுமையை விளக்குக.

23. இரவு பகல் – எவ்வகைத் தொடர் என விளக்குக.

24. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

25. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தினை எழுதுக.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - III

பிரிவு - 1

பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டனுக்கு** விடையளிக்கவும். **2x4=8**

26. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

27. உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

28. உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை ?

பிரிவு - 2

பின்வரும் வினாக்களுள் **எவையேனும் இரண்டனுக்கு** விடையளிக்கவும். **2x4=8**

29. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

30. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை ?

31. நீர்நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

பிரிவு - 3

32. பொருத்துக. **4x1=4**

(a)	இயற்கை ஓவியம்	(i)	சிந்தாமணி
(b)	இயற்கைத் தவம்	(ii)	பெரியபுராணம்
(c)	இயற்கைப் பரிணாமம்	(iii)	பத்துப்பாட்டு
(d)	இயற்கை அன்பு	(iv)	கம்பராமாயணம்

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

33. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **6x1=6**

(அ) முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா ?

- (செய்தித் தொடராக மாற்றுக)

(ஆ) குன்றின் மேலிட்ட விளக்கைப் போல.

-(உவமைத் தொடரைப் பயன்படுத்தி தொடர் அமைக்க)

(இ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும்
முப்பால் பகுப்பு கொண்டது

(பொருத்தமான நிறுத்தக் குறியிடுக).

(ஈ) வாழையடி வாழையாக.

(தொடரில் அமைத்து எழுதுக)

(உ) பானையை உடைத்தது கண்ணன் அல்ல.

(பிழையை திருத்தி எழுதுக)

(ஊ) எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.

(ஒரே தொடராக மாற்றுக)

பிரிவு - 4

34. பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

ஆற்றுதல் என்பது
ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது
புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது
பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது
தன்கிளை செறாஅமை

வினாக்கள் :

(அ) அலந்தவர் என்பதன் பொருள் யாது ?

(ஆ) 'பாடறிந்து' – சொல்லை பிரித்தெழுதுக.

(இ) பாடலில் உள்ள எதுகைச் சொற்களை எழுதுக.

(ஈ) இப்பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

(உ) 'போற்றுதல்' என்றால் என்ன ?

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - IV

பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றிற்கு விரிவான** விடையளிக்கவும். **1x5=5**

35. தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

36. திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

37. ''அறிவுசால் ஔவையார்'' என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

பகுதி - V

பிரிவு - 1

38. கட்டுரை வடிவில் விடையளிக்கவும். **1x7=7**

(அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

அல்லது

(ஆ) நூலகம்

பிரிவு - 2

39. பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** கடிதம் எழுதுக. **1x7=7**

(அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

அல்லது

(ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - VI

அடிபிறழாமல் எழுதுக. **2+2+3+3=10**

40. ''தக்கார்'' – எனத் தொடங்கும் குறள்.

41. ''விடல்'' – என முடியும் குறள்.

42. ''வாழ்க நிரந்தரம்'' - எனத் தொடங்கி

''என்றென்றும் வாழியவே''

- என முடியும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.

43. 'ஒன்றே குலம்' - எனத் தொடங்கும் 'ஒன்றே குலம்' பாடலை எழுதுக.

- o O o -

tnkalvi.online

.

tnkalvi.online